Aaruthal

**எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான**

# விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021

## மாதிரி வினாத்தாள் – II

**தரம் - 11** | **வரலாறு - I** | **நேரம் :- 1 மணித்தியாலம்**

**கவனிக்க :-**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (✕) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

### பகுதி - I

1. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டமை தகவல்கள் விரிவாக்கமாகக் குறிப்பிடப் பட்டுள்ளமை இந்நாட்டின் முதன்மையான வம்சக் கதையாக அமைந்துள்ளமை போன்ற விடயங்களுடன் தொடர்புடைய உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான நூல் எது?
   (1) மகாவம்சம் (2) தீபவம்சம்
   (3) நிக்காயசங்கிரகய (4) போதிவம்சம்

2. மகாவம்ச நூலுக்கு எழுதப்பட்ட உரை நூல்
   (1) ராஜாவலிய (2) வம்சத்தபாகாசினி
   (3) ராஜரத்னகரய (4) வினயட்டகத்தாவ

3. இலங்கை பற்றி குறிப்பிடுகின்ற டிமுண்டோ, இன்டிக்கா போன்ற நூல்களை எழுதிய கிரேக்க நாட்டவர்களாகக் கருதப்படுபவர்கள் முறையே
   (1) அரிஸ்ரோட்டில், மெகத்தனிஸ்
   (2) அரிஸ்ரோட்டில், பிளேட்டோ
   (3) தொலமி, மெனதனிஸ்
   (4) தொலமி, பிளேட்டோ

4. கோட்டை இராசதானி முதல் கண்டி இராசதானி வரையிலான வரலாற்றை அறிந்து கொள்ள உதவுகின்ற போர் காவியங்களுள் ஒன்று
   (1) மயூரசந்தேசிய (2) பெரகும்பாசிரித்த

(3) கொன்ஸ்தாந்தினுசட்டன  (4) செலகினிசந்தேசய

5. இசுறுமுனிய விகாரையில் காணப்படும் குதிரைத் தலையும் மனிதனும் என்னும் செதுக்கலில் குதிரைத் தலை குறிப்பது
   (1) பர்ஜன் என்னும் தெய்வம்
   (2) சோமன் எனப்படும் தெய்வம்
   (3) அக்கித் தெய்வம்
   (4) வர்ணன் எனப்படும் தெய்வம்

6. இரணைமடுப் படிவுகள் உருவாகிய காலகட்டமாக கருதப்படுவது
   (1) ஹொலோசியன் கலைகட்டம்
   (2) மயோசியன் காலகட்டம்
   (3) பிளைத்தோசீன் காலகட்டம்
   (4) இயோசின் காலகட்டம்

7. இரண்டாக பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடும் வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடும் கண்டெடுக்கப்பட்ட குகைகள் முறையே
   (1) இராவணஎல்ல,கித்துள்கல
   (2) பாகியன்கல,பெல்லன் பதிபெலஸ்ஸ
   (3) இராவணஎல்ல,குருவிட்டபட்டதொம்பலென
   (4) குருவிட்டபட்டதொம்பலென,பாகியன்கல

8. தொழில்நுட்ப அடிப்படையில் மாறுநிலைக் காலமாகக் கருதப்படுவது
   (1) முன் வரலாற்றுக் காலம்
   (2) வரலாற்றுக்கு முற்பட்டகாலம்
   (3) வரலாற்றுக் காலம்
   (4) ஆரம்பவரலாற்றுக் காலம்

9. கல்லாயுதங்களின் பாவனை முழுமையாகக் கைவிடப்பட்ட காலம்
   (1) வரலாற்றுக் காலம்
   (2) கற்காலத்தின் இறுதிப்பகுதி
   (3) பின் வரலாற்றுக் காலத்தின் ஆரம்பம்
   (4) முன் வரலாற்றுக் காலத்தின் இறுதிப் பகுதி

10. இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியேற்றங்களின் பரம்பலானது நதிக் கரையோரங்களிற்கு வெளியே காணப்பட்டதாக நவீன தொல் பொருளியலாளர்கள் கருதுகின்றனர். மேற்படி கருத்தை உறுதிப்படுத்துவதற்கான நதிக்கரையோரமாக அமைவது எது?
   (1) கல்லோயா  (2) கிரிந்திஓயா  (3) மல்வத்துஓயா  (4) யான் ஓயா

11. இலங்கையின் ஆட்சிப் பிரதேசங்களை நிர்வாக மாவட்டங்களாகப் பிரித்து அம் மாவட்டங்களை நிர்வகிப்பதற்கு அதிகாரிகளை நியமித்து நாட்டின் வரிஅளவீடு செய்யும் முறையையும் ஒழுங்குபடுத்திய ஆட்சியாளர்

(1) வலகம்பா (2) வசபன்
(3) தேவநம்பியதீசன் (4) துட்டகைமுனு

12. புராதன காலத்தில் பருமகர்களால் பரிபாலிக்கப்பட்ட குளத் தொகுதியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பெயர்

(1) ஒலகம (2) நியம்கம (3) திங்குலிக்கா (4) வெப்பிரபாதனய

13. சங்கமித்தையினால் புனித வெள்ளரசு மரக்கிளை கொண்டு வரப்பட்ட துறைமுகத்தினையும் ஹேமலதா இளவரசி தத்த இளவரசன் ஆகியோரால் புனித தந்ததாது கொண்டு வரப்பட்ட கப்பல் தரிப்பிடத்தினையும் தரும் விடையை முறையே தெரிவு செய்க.

(1) சூரகதித்த, மாதோட்டம்
(2) பிம்பதித்த, கலாதித்த
(3) ஜம்புகோளப்பட்டினம், லங்காபட்டினம்
(4) சலவத்தோட்ட, ஹிம்மதித்த

14. "அ" பகுதியில் அளவீட்டுமுறைகளும் "ஆ" பகுதியில் அளவீட்டுக் கருவிகள் மூலம் அளவீடு செய்யப்பட்ட விடயங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றினைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவுசெய்க.

| அ | ஆ |
|---|---|
| (1) பரமானு | (A) நிறை |
| (2) கரிசை | (B) காலம் |
| (3) தரண | (C) பரப்பு |
| (4) வச | (D) தூரம் |

(1) D, C, A, B (2) D, B, A, C (3) B, A, C, D (4) C, D, A, B

15. கல்வெட்டு மூலாதாரங்களில் "தகபதி" எனக் குறிப்பிடப்படுவது

(1) நீர் வரியாகும் (2) தானியவரியாகும்
(3) மீன் வரியாகும் (4) துறைமுகவரியாகும்

➢ **கீழ்வரும் வரலாற்று நிகழ்வுகளை கருத்தில் கொள்க.**

A) திரிபீடகம் மாத்தளை அலுவிகாரையில் நூல் உருவாக்கப்பட்டமை.
B) சரசோதிமாலை எனப்படும் தமிழ் நூல் எழுதப்பட்டமை.
C) செங்கோ இலங்கை மீது படைஎடுத்தமை.

D) கவிசிலுமின என்னும் நூல் எழுதப்பட்டமை.

16. மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம் பெற்றகால ஒழுங்கினைச் சரியாகக் கொண்டுள்ள விடையாது?

(1) ACDB (2) ADCB (3) DACB (4) DBCA

17. முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இவளிடம் பரம்பரையான சட்டபூர்வ ஆட்சி உரிமை காணப்பட்டது.
(2) றோமன் கத்தோலிக்க சமயத்தைக் கைவிட்டு பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டான்.
(3) கண்டி தலாதாமாளிகையை அமைப்பித்தான்.
(4) தந்துரே,பலன போர்களில் போர்த்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்தான்.

18. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதி அரசன் யார்?

(1) புவிராஜசேகரன்
(2) சங்கிலியன்
(3) பரராஜசேகரன்
(4) வரோதயசிங்கையாரியன்

➢ **கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 19, 20 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.**

| அரசன் | இடம் | பட்டப் பெயர் |
|---|---|---|
| A) 6ம் புவனேகபாகு | D) தம்பதெனியா | G) சவுளுவிஜயபாகு |
| B) 2ம் பராக்கிரமபாகு | E) குருநாகல் | H) கலிகால சாகித்திய சர்வஞ்ஞ பண்டிதர் |
| C) 4ம் விஜயபாகு | F) கோட்டை | I) சப்புமல்குமாரன் |

19. கோட்டை இராச்சியத்துடன் தொடர்புடைய அரசனையும் அவன் கொண்டிருந்த பட்டப் பெயரையும் குறிப்பிடும் விடை எது?

(1) BH (2) AF (3) AJ (4) CG

20. 2ம் பராக்கிரமபாகு ஆட்சிபுரிந்த இராசதானியையும் அவனது பட்டப் பெயரையும் சரியாகக் குறிப்பிடும் விடைஎது?

(1) FG (2) EJ (3) DJ (4) DH

21. அரசனுக்கு பின் மருமகனுக்கு (சகோதரியின் மகனுக்கு) அரசுரிமை வழங்குகின்ற முறையைப் பின்பற்றிய இராச்சியம் எது?

(1) அநுராதபுரம் (2) கம்பளை (3) கண்டி (4) யாழ்ப்பாணம்

22. இறுதித் தீர்ப்பு, சிஸ்டைன் ஆலயத்தில் ஆதாமின் சித்திரம் என்பவற்றை வரைந்த மறுமலர்ச்சிக்கால சித்திரக் கலைஞர்
(1) லியானாடோடாவின்சி (2) மைகல் ஆச்சலோ
(3) ரபாயல் (4) மெசெக்ஷியோ

23. பிரித்தானியாவின் பருத்தித் துணிகளுக்கு அதிககேள்வி காணப்பட்ட ஆசியநாடு
(1) சீனா (2) ஜப்பான் (3)இலங்கை (4) இந்தியா

24. கோல்புறூக் குழுவினால் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்கும் பொருட்டு முன்வைக்கப்பட்ட ஆலோசனை
(1) நாட்டை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தல்
(2) சட்டவாக்கக் கழகம், சட்டநிர்வாகக் கழகம் என்பவற்றை ஆரம்பித்தல்
(3) கண்டியையும் தாழ்நிலப் பிரதேசங்களையும் இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்
(4) அரசின் ஏகபோக வர்த்தகமுறை அகற்றப்பட்டமை

➢ **கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள சோடிப் பதங்களின் அடிப்படையில் 25 - 27 வரையிலான வினாக்களுக்கு விடைதருக.**

A) 1 - உப்பு,கறுவாஆகியவற்றின் ஏகபோக உரிமையை நீக்குதல்
2 - தனியார் வர்த்தகத்திற்கு அனுமதியளித்தல்

B) 1 - கோப்பிப் பயிர்ச் செய்கை
2 - ஹமிலியாவெஸ்டாக் நோய்

C) 1 - தேயிலைப் பயிர்ச் செய்கை
2 - லுங்கந்ததோட்டம்

D) 1 - தென்னைபயிர்ச் செய்கை
2 - ஜேம்ஸ் டெயிலர்

25. முதலாவது விடயத்தால் இரண்டாவது வளர்ச்சியைக் காட்டும் சோடிபதம் எது?
(1) A (2) B (3) C (4) D

26. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

27. இரண்டாவது முதலாவதன் அழிவுக்கு காரணமாகியதை வெளிப்படுத்தும் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

28. பௌத்தமத மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட ஐம்பெரும் விவாதங்களில் சர்வதேசரீதியாகப் பிரபலம் பெற்ற விவாதம் நடைபெற்ற இடம் எது?

(1) பாணந்துறை விவாதம்

(2) உதன்விட விவாதம்

(3) வராகொட விவாதம்

(4) பத்தேக மவிவாதம்

29. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு எது?

(1) கோல்புறூக் அரசியல் யாப்புசீர்திருத்தம்

(2) டொனமூர் அரசியல் யாப்புசீர்திருத்தம்

(3) மனிங் அரசியல் யாப்புசீர்திருத்தம்

(4) குறுமக்கலம் அரசியல் யாப்புசீர்திருத்தம்

30. 1848 இல் இலங்கையில் இரண்டாம் சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற போது ஆளுநராகக் கடமையாற்றியவர் யார்?

(1) றொபேட் பிரவுண்றிக்

(2) தோமஸ் மெயிற்லண்ட்

(3) எட்வேட் பாண்ஸ்

(4) டொரிங்டன்

31. 1919 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய சங்கத்தை உருவாக்க சிங்களத் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் தலைவர் யார்?

(1) சேர்.பொன். இராமநாதன்

(2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(3) அறிஞர் எம். சி. சித்திலெப்பை

(4) சேர்.பொன். அருணாசலம்

➢ **கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு 32, 33, 34 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

A) 1 - பிரான்ஸிய புரட்சி
   2 - பண்டீல் சிறைசாலை உடைப்பு

B) 1 - பிரதிநித்திதுவம் இன்றேல் வரியும் இல்லை
   2 - அமெரிக்கபுரட்சி

C) 1 - கைத்தொழில் புரட்சி
   2 - சூழல் மாசடைதல்

D) 1 - லியோன் றொஸ்சி

2 - சர்வதேசசங்கம்

32. இரண்டாவது நிகழ்வினால் முதலாவது நிகழ்வு தீவிரமடையக் காரணமான விடைத் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) D (2) B (3) C (4) A

33. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எதுவித தொடர்பும் இல்லாத விடையைத் தரும் சோடி

(1) A (2) B (3) C (4) D

34. முதலாவதில் ஏற்பட்ட வளர்ச்சி இரண்டாவது ஏற்பட்ட வழிவகுத்த விடைச் சோடியைத் தெரிவுசெய்க.

(1) A (2) C (3) B (4) D

35. ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றதற்கான முக்கிய காரணம்

(1) நாடு முழுவதிலும் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டமையும் பாணின் விலை அதிகரித்தமையும்
(2) விவசாயத்தை விட தொழிற்சாலைகளில் ஆயுத உற்பத்தி அதிகரித்தமை
(3) தொழிலாளர் விவசாயிகளுடன் படைவீரர்களும் புரட்சியில் இணைந்து கொண்டமை
(4) ஆயுதம் தரித்த குழுவினர் அதிகாரத்தின் முக்கிய மத்திய நிலையங்களைக் கைப்பற்றியமை

36. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்காக ஐக்கியஅமெரிக்காவின் தலைமையில் உருவாக்கப்பட்ட அமைப்பு

(1) வோர்சோ (2) நேட்டோ
(3) சார்க் (4) அணிசேராநாடுகள்

37. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் மோதல்கள் குறித்து ஆராய்ந்து பார்த்து அவற்றைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கு சிபாரிசுகளை முன்வைக்கும் ஐக்கியநாடுகள் சபையின் அமைப்பு எது?

(1) பாதுகாப்புசபை (2) பொதுச்சபை
(3) செயலகம் (4) சமூகபொருளாதார சபை

38. இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் ஐக்கியஅமெரிக்காவின் ஜனாதிபதியாகக் கடமையாற்றியவர் யார்?

(1) ஜிம்மி காட்டர்
(2) வின்சன்ட் சேர்ச்சில்
(3) பிராங்னின் டீ ரூஸ்வெஸ்ட்

(4) ஜோர்ச் புஷ்

39. அடோல்ப் ஹிட்லர் ஜேர்மனியில் சான்சிலர் பதவிக்கு நியமிக்கப்படும் போது ஜேர்மனியின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் யார்?
   (1) ஓட்டோமன் பிஸ்மார்க்
   (2) அங்கேல் மிக்கல்
   (3) வொன்ஹன்ட்ன் பார்
   (4) இரண்டாம் வில்லியம்

40. அணிசேரா அணியை உருவாக்க முன்னின்று உழைத்த இந்தியாவின் தலைவர்
   (1) ஜகவர்லால் நேரு
   (2) மகாத்மாகாந்தி
   (3) சுபாஸ் சந்திரபோஸ்
   (4) லால் பகதூர் சாஸ்திரி

($40 \times 2 = 80$ புள்ளிகள்)

Aaruthal

**எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான**

# விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021

## மாதிரி வினாத்தாள் – II

| தரம் - 11 | வரலாறு - II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**கவனிக்க :-**

- பகுதி I இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடைஎழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தின் ஒருபகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) ஜம்புகோளப்பட்டினம், வல்லிபுரம், திஸ்ஸவாவி, புத்தளம், ரிட்டிகல திருகோணமலை, பராக்கிரமசமுத்திரம்,மகாவலிகங்கை, கம்பளை மகியங்கணை, மகாவாலுகாகம, கும்புகன் ஓயா

*(12 புள்ளிகள்)*

(ii)

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | ஸ்பெயின் | கொன்ந்தாந்திநோபரிள் |
| பிரித்தானியா | மும்பாய் | செங்கடல் |

*(06 புள்ளிகள்)*

(ஆ) (i) கீழ்வரும் A, B, C, D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - இரட்டைஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஆளுனராகப் பணியாற்றியவர்

B - பர்மா மீது படையெடுத்து இலங்கையில் வர்த்தக உரிமையைப் பாதுகாத்த பொலன்னறுவை ஆட்சியாளர்


C - கண்டியில் புதிய அரசவம்சம் ஒன்றை உருவாக்கிய மன்னன்

D - முதலாம் உலக மகாயுத்தத்தின் பின் உலக சமாதானத்தை பேண உருவாக்கப்பட்ட அமையம்

*(04 புள்ளிகள்)*

- **A, B ஆகிய வற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.**

A



(ii) 1. A இனால் காட்டப்பட்டுள்ள அமைப்பின் பெயர் என்ன?

2. இது கண்டெடுக்கப்பட்ட பிரதேசம் எது?

3. இதன் பயன்பாடு யாது?

4. இதன் மூலம் நாம் இன்று பெறக்கூடிய தகவல் யாது? *(04 புள்ளிகள்)*

B



(iii) 1. B படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

2. படத்தில் காட்டப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?

3. மேற்படி நபருக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர் யாது?

4. இக்கருவி மூலம் இவர் கண்டறிந்த விடயம் யாது?

*(04 புள்ளிகள்)*

## பகுதி - II

2. (i) வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களின் வாழ்விடங்கள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

(ii) வரலாற்றுக்க முற்பட்டகால மக்களின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட இரு இடங்கள் கீழே தரப்படுகின்றது. அவ் எச்சங்கள் வெளிக்காட்டி இருந்த பண்புகள் ஒவ்வொன்றுதருக.

A. இராவணன் எல்லகுகை

B. குருவிட்டபட்டதொம்பலெனகுகை *(04 புள்ளிகள்)*

(iii) "முன் வரலாற்றுக் காலம் தொழில்நுட்ப அடிப்படையில் முன்னேறிய காலமாகும்" இக் காலத்தில் சிறப்பு பெற்றுக் காணப்பட்ட தொழில்நுட்பம் இரண்டு தந்து விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) வரலாற்றுக்கால குடியேற்றத்தின் கட்டமைப்பை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

3. (i) பண்டைய சமுதாயத்தின் சுகாதாரத் தேவையை மேம்படுத்தும் பொருட்டு நடவடிக்கை எடுத்த மூன்று ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) வரலாற்று மூலாதாரங்களுக்கு அமைய இலங்கையின் பண்டைய சமுதாயத்தில் காணப்பட்ட நான்கு கைத்தொழில்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) பண்டைய இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் நிலவியமையைக்கான ஆதாரங்களை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) அந்நிய பண்பாட்டை சேர்ந்த மக்கள் பிரிவுகளுடன் நட்புறவுடன் வாழுதல் இலங்கையின் வரலாற்றில் துல்லியமாக தெரியும் பண்பாகும். மூன்று உதாரணங்கள் மூலம் விளக்குக. *(06 புள்ளிகள்)*

4. (i) இலங்கையில் அநுராதபுரக் காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் மூன்று தருக. *(03புள்ளிகள்)*

(ii) நீர் முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் விடயங்கள் குறிக்கும் விடயங்களைத் தருக.

A) ராஜமொஹால

B) தண்ணீர் விளக்கு

C) அபுக்

D) வெவ்பிரபாதானய *(04 புள்ளிகள்)*

(iii) சிகிரியாவின் நீர்ப் பூங்கா தொழில்நுட்பம் பற்றிச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இரும்பைப் பிரித்தெடுப்பது தொடர்பாக பின்பற்றப்பட்ட தொழில்நுட்ப முறையை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

5. (i) கீழ்வரும் A, B, C ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. செங்கோ என்னும் சீனத் தளபதியின் வருகையின் போது கம்பளை அரசன்

B. படுகொலைசட்டத்தை அமுல்படுத்திய அரசன்

C. பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய மன்னன் *(03புள்ளிகள்)*

(ii) இலங்கையில் இரண்டாவது நகரமயமாக்கல் காலகட்டத்திற்குரிய பண்டைய நிர்வாகத் தலைநகரங்கள் நான்கினைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) 3ம் விஜயபாகு மன்னனின் சமயப் பணிகளை இரண்டு உதாரணம் ஊடாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் சிறந்த ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்குரிய காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

6. (i) இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த ஐரோப்பிய நாடுகள் மூன்றினைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற விரும்பியமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) கி. பி. *1803* ஆம் ஆண்டின் பிரித்தானியர் கண்டி மீது படையெடுத்தமைக்கான காரணங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) *1818 1* ஆம் சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

7. (i) கி. பி. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கி. பி. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி ஜனாதிபதியிடம் காணப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் இரண்டு குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் சமூக முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை இரு விடயங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னர் விவசாய அபிவிருத்தியின் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

## பகுதி - III

8. (i) கைத்தொழில் புரட்சி முதலில் ஆரம்பமான மூன்று துறைகளையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புடையயோரை அடைப்புக்குறிக்குளிருந்து தெரிவு செய்க.

A. பறக்கும் நூணாழி

B. ஜெனி இயந்திரம்

C. மோட்டார் வாகனம்

D. ஆகாயவிமானம்

(ஜோன்கே, ஜேம்ஸ் ஹாகிரீயஸ்,டெம்லர்,ரைட் சகோதரர்கள்,ஹென்றிபேர்மக்)

(04 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாகியமைக்கான காரணங்கள் இரண்டு தந்து விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட சமூக,அரசியல் பொருளாதார விளைவுகள் ஒவ்வொன்று தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

9. (i) ஐக்கியநாடுகள் சபையின் கட்டமைப்புக்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(ii) 1 ஆம் உலகயுத்த முடிவில் பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட பின்வரும் நாடுகளின் தலைவர்களைத் தருக.

A. ஐக்கியஅமெரிக்கா

B. பிரித்தானியா

C. பிரான்ஸ்


D. இத்தாலி (04 புள்ளிகள்)


(iii) முதலாம் உலகமகாயுத்தமுடிவில் வெர்செல்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனிக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

(iv) முதலாம் உலகமகாயுத்தத்தின் விளைவுகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)




N
අප්‍රිකාව
ஆபிரிக்கா
Africa
ඉන්දියන් සාගරය
இந்து சமுத்திரம்
Indian Ocean